**// தேர்வுகள் / தனிக்கவனம் //** **மிக முக்கியம்**

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
நக.எண். 0126/ஆ4 /2022 நாள். 03.03.2022

பொருள் தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – முதல் திருப்புதல் தேர்வு– பிப்ரவரி – 2022 – அனைத்து வகை உயர்/மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளிகள் – 10 மற்றும் 12–ஆம் வகுப்பு விடைத்தாட்கள் மதிப்பீட்டு பணி மேற்கொண்டமை – **மதிப்பெண் பட்டியல் மற்றும் அதற்குண்டான விடைத்தாட்களையும்** பெற்றுக்கொள்ள கோருதல் சார்பு.

பார்வை 1 சென்னை–06, பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண் 020931/பிடி2/இ1/2021 நாள்–12.11.2021
2 சென்னை–06, அரசுத்தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண் 026826/எச்1/2021 நாள்–31.01.2022
3. சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 12 / Conf / 2021 நாள் 24–02–2022

••••••

பார்வை 1ல் மற்றும் 2ல் காணும் செயல்முறை கடித ஆணையின்படி 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான முதல் திருப்புதல் தேர்வு 09.02.2022 முதல் 17.02.2022 வரை நடைபெற்று முடிந்தது. அத்தேர்விற்குண்டான விடைத்தாட்கள் மதிப்பீட்டு பணி முடிவடைந்ததால் தற்போது கீழ்க்குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் தங்கள் பள்ளிகளுக்குண்டான விடைத்தாட்கள் மற்றும் மதிப்பெண் பட்டியல்களை வேலூர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி விடைத்தாள் வழங்கும் குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து வகை உயர், மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை பதிவிறக்கம் செய்து முழுமையாக பூர்த்தி செய்து தனி நபர் அனுப்பி (தங்களது பள்ளி விடைத்தாட்களின் எண்ணிக்கை மற்றும் உறைகளின் எண்ணிக்கையினை கருத்தில் கொண்டு உரிய ஏற்பாடுகளுடன் ஒன்று அல்லது இரண்டு பணியாளர்கள்) விடைத்தாட்கள் மற்றும் மதிப்பெண் பட்டியல்களை பெற்றுக்கொள்ள வேண்டும். பெறப்பட்ட விடைத்தாட்களை சார்ந்த மாணவர்களுக்கு 14–03–2022க்குள் வழங்கி திரும்ப பள்ளியில் பெற்று மதிப்பெண் பட்டியலுடன் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும்.

விடைத்தாள் மதிப்பீடு தொடர்பான சந்தேகங்களுக்கு கீழ்க்குறிப்பிட்டுள்ள அலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு அனைத்து வகை உயர்/ மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**9486273764 / 9442193441**

இணைப்பு
10ம் வகுப்பு படிவம்
12ம் வகுப்பு படிவம்

(ஒப்பம்) ச. முனுசாமி,
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்
அனைத்து வகை உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர் தகவலுக்காகவும் தொடர்நடவடிக்கைக்ககாவும் அனுப்பலாகிறது.

வேலூர் மாவட்டம்

மதிப்பெண் பட்டியல் மற்றும் விடைத்தாட்கள் வழங்கப்படும் அட்டவணை விவரம்

| வ. எண் | நாள் | பள்ளி வகை | ஒன்றியம் விவரம் | நேரம் |
|---|---|---|---|---|
| 1 | 04.03.2022 | அனைத்து வகை உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மெட்ரிக் உயர்நிலைப் பள்ளிகள் | பேர்ணாம்பட்டு / கே வி குப்பம் / குடியாத்தம் / காட்பாடி | காலை 10.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணிவரை |
| | | | வேலூர் / அணைக்கட்டு / கணியம்பாடி | பிற்பகல் 02.00 மணி முதல் பிற்பகல் 05.00 மணி வரை |
| 2 | 05.03.2022 | அனைத்து வகை மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகள் | பேர்ணாம்பட்டு / கே வி குப்பம் / குடியாத்தம் / காட்பாடி | காலை 10.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணிவரை |
| | | | வேலூர் / அணைக்கட்டு / கணியம்பாடி | பிற்பகல் 02.00 மணி முதல் பிற்பகல் 05.00 மணி வரை |

(ஒப்பம்) ச. முனுசாமி,
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்